## குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த

# பெருமாள் திருமொழி 5 - தருதுயரம்

## (விற்றுவக்கோட்டம்மான்[1] விஷயமாக: ஆழ்வார் தமது ஆகிஞ்சன்ய அநந்யகதித்வங்களைத் தெரிவித்தல்)

688 * தருதுயரம் தடாயேல் * உன் சரண் அல்லால் சரண் இல்லை *
விரை குழுவும் மலர்ப்பொழில் சூழ் * விற்றுவக்கோட்டம்மானே! **
அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் * மற்றவள் தன்
அருள் நினைந்தே அழும் குழவி * அதுவே போன்றிருந்தேனே 1

689 கண்டார் இகழ்வனவே * காதலன் தான் செய்திடினும் *
கொண்டானை அல்லால் * அறியாக் குலமகள் போல் **
விண்தோய் மதிள் புடை சூழ் * விற்றுவக்கோட்டம்மா! * நீ
கொண்டாளாயாகிலும் * உன் குரைகழலே கூறுவனே 2

690 மீன் நோக்கும் நீள்வயல் சூழ் * விற்றுவக்கோட்டம்மா! * என்
பால் நோக்காயாகிலும் * உன் பற்றல்லால் பற்றிலேன் **
தான் நோக்காது எத்துயரம் * செய்திடினும் * தார்வேந்தன்
கோல் நோக்கி வாழும் * குடி போன்றிருந்தேனே 3

691 வாளால் அறுத்துச் சுடினும் * மருத்துவன் பால் *
மாளாத காதல் * நோயாளன் போல் மாயத்தால் **
மீளாத் துயர் தரினும் * விற்றுவக்கோட்டம்மா! * நீ
ஆளா உனதருளே * பார்ப்பன் அடியேனே 4

692 வெங்கண் திண்களிறு அடர்த்தாய்! * விற்றுவக்கோட்டம்மானே! *
எங்குப் போய் உய்கேன்? * உன் இணையடியே அடையல் அல்லால் **
எங்கும் போய்க் கரை காணாது * எறிகடல் வாய் மீண்டேயும் *
வங்கத்தின் கூம்பேறும் * மாப்பறவை போன்றேனே 5

693 செந்தழலே வந்து * அழலைச் செய்திடினும் * செங்கமலம்
அந்தரம் சேர் * வெங்கதிரோற்கல்லால் அலராவால் **
வெந்துயர் வீட்டாவிடினும் * விற்றுவக்கோட்டம்மா! * உன்
அந்தமில் சீர்க்கல்லால் * அகம் குழைய மாட்டேனே 6

694 எத்தனையும் வான் மறந்த[2] காலத்தும் * பைங்கூழ்கள் *
மைத்தெழுந்த மாமுகிலே * பார்த்திருக்கும் மற்றவை போல் **
மெய்த்துயர் வீட்டாவிடினும் * விற்றுவக்கோட்டம்மா! * என்
சித்தம் மிக உன் பாலே * வைப்பன் அடியேனே 7

---

[1] வித்துவக்கோடு என்றும் திருமொழி முழுவதும் பாடம்
[2] வறந்த

695 தொக்கிலங்குயாறெல்லாம் * பரந்தோடி * தொடுகடலே
புக்கன்றிப் புறம் நிற்க * மாட்டாத மற்றவை போல் **
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்! * விற்றுவக்கோட்டம்மா! * உன்
புக்கிலங்கு சீரல்லால் * புக்கிலன் காண் புண்ணியனே! 8

696 நின்னையே தான் வேண்டி * நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே * தான் வேண்டும் * செல்வம் போல் மாயத்தால் **
மின்னையே சேர் திகிரி * விற்றுவக்கோட்டம்மா![3] *
நின்னையே தான் வேண்டி * நிற்பன் அடியேனே 9

697 * விற்றுவக்கோட்டம்மா! * நீ வேண்டாயே ஆயிடினும் *
மற்றாரும் பற்றில்லேன் என்று * அவனைத் தாள் நயந்த **
கொற்றவேல் தானைக் * குலசேகரன் சொன்ன *
நற்றமிழ் பத்தும் வல்லார் * நண்ணார் நரகமே 10

**அடிவரவு:** தரு கண்டார் மீன் வாளால் வெங்கண் செந்தழல்
எத்தனை தொக்கு நின்னை விற்றுவக்கோடு ஏர்

[3] விற்றுவக்கோட்டம்மானே